RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s22277

புறநானூற்றில் ஔவையாரின் செல்நெறிகள்

செ. தாமரைச்செல்வி [அ, *], **ச. மல்லிகா** [அ]

[அ] தமிழ்த்துறை, ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், இணைவு பெற்றது), தூத்துக்குடி-628002, தமிழ்நாடு, இந்தியா

Literary Motifs of Avvaiyar in Purananuru

S. Thamaraiselvi [a, *], **S. Mallika** [a, *]

[a] Department of Tamil, A.P.C. Mahalaxmi College for Women (Affiliated to Manonmaniam Sundaranar University), Thoothukudi-628002, Tamil Nadu, India

* Corresponding Author: kamaliroja0@gamil.com

Received: 08-09-2022
Revised: 09-11-2022
Accepted: 16-11-2022
Published: 05-12-2022

ABSTRACT

Many women in the Sangam period excelled in academics but only very few expressed themselves to the world. This situation has continued since the Sangam period. The Sanga period is a golden age in the history of Tamil Nadu. Purananuru is like a bait for the heroic Tamil people of ancient times. Avvaiyar was the epitome of the virtue that one must have performed good to be born as a women. Avvaiyar has a special place among Sangam poets. As a woman, she is filled with self-confidence and courage, and because of her education, she has the power to solemnly raise voice against the king Athiyaman Parisil. Avvaiyar served as a great court scholar and a great political diplomat to the kurunila king. In her songs, she portrays social virtue, the virtue of friendship, and the virtue of war. She infuses the sense of misery and suffering through the songs. This article examines the literary motifs of Avvaiyar in Purananuru.

Keywords: Sangam Period, Avvaiyar, Women, Sangam Poets

முன்னுரை

சங்ககாலத்தில் வாழ்ந்த பெண்பாற்புலவர்களுள் தனித்த ஆளுமை ஆற்றல் கொண்டவர் ஔவையார். இவர் நூற்றாண்டுகள் பல கடந்தும் தமது இலக்கியப்புலமையால் மக்கள் மனத்தில் நிலைத்து நிற்பவர். ஒழுக்கம், அரசியல், வீரம், நட்பு, தன்னம்பிக்கை எனப் பரந்துபட்டப் பாடல் தளத்தில் கவிதை புனைந்து வெற்றிகண்டவர். இவர் சங்க இலக்கியத்தில் அதிகமான பாடல்களைப் பாடியுள்ளார். நற்றிணையில் ஏழு பாடல்கள், குறுந்தொகையில் பதினைந்து பாடல்கள், அகநானூற்றில் நான்கு பாடல்கள், புறநானூற்றில் முப்பத்துமூன்று பாடல்கள் என ஐம்பத்தொன்பது பாடல்களைப் பாடிய சிறப்பிற்குரியவர். அவர் பாடிய பாடல்களில் உயரிய சிந்தனைகளைக் காணமுடிகிறது. ‘இருபேராண்மை செய்த பூசல்’ என்ற பாடலில் ஆண்மை பெண்ணுக்கும் உண்டு எனவும், தம்முடைய எண்ணங்களைப் படைக்கும் திறமை இருபாலர்க்கும் உரியன என்கிறார். இதன்வழி பண்டைத்தமிழ்ச் சமுதாயத்தின் மனப்போக்கை அறிந்து கொள்ளமுடிகிறது. தமிழ்மக்களின் ஒற்றுமைக்காகவும், அமைதிக்காகவும், வளமான வாழ்க்கைக்காகவும், நீதிக்காகவும் பல பாடல்களை இயற்றியுள்ளார். ‘உண்பது நாழி உடுப்பவை இரண்டு’ என்னும் வரியில் மனிதவாழ்க்கையின் உண்மைநிலையைப் பாடியுள்ளார். மனிதர்களுக்கிடையில் ஒற்றுமையுணர்வு வேண்டும். எல்லோரும் இன்புற்று வாழத் தம்மிடம் இருப்பதைப் பிறர்க்குப் பகிர்ந்து கொடுத்து வாழுகின்ற பண்புநலன் வேண்டும் எனப்பாடல்கள் மூலம் வழிவகுத்துக் கொடுத்தவர். போர்கள் சமுதாயத்திற்குப் பேரழிவையும், சமுதாய முன்னேற்றத்தையும்

தடுப்பவை என்பதால் போரற்றச் சமுதாய அமைப்பை உருவாக்குவதற்குத் தம்பாடல்கள் வழி அறிவுரை வழங்கியவர். புறநானூற்றில் இவர் பாடிய இரங்கற்பாக்கள் அன்றைய சமுதாய நிலையை எடுத்துரைப்பவை. தெளிந்த சிந்தனையும், அஞ்சாமையும், துணிவும், வீரமும் கொண்டு அவர் பாடிய பாடல்கள் இன்புறுத்தியும், அறிவுறுத்தியும் மக்களை நல்வழிக்கு அழைத்துச் செல்கின்றன என்பதைக் காண்பதாக இக்கட்டுரை அமைகிறது.

ஒழுக்கம்

பெண்புலவரான ஔவையார் 'கலை இன்பத்தைத் தந்தால் மட்டும் போதாது அது அவனை அற வழியில் செலுத்துவதாக அமைய வேண்டும்' என்பதற்கு ஏற்ப அறநெறியில் செலுத்தும் பாடல்களைப் பாடியுள்ளார்.

"நாடா கொன்றோ காடாகொன்றோ

அவலா கொன்றோ மிசையா கொன்றோ

எவ்வழி நல்லவ ராடவர்

அவ்வழி நல்லை வாழிய நிலனே" (Avvai Duraisamy Pillai, 1968)

என்ற பாடலில் நிலம் காடாக இருக்கலாம், நாடாகவும், பள்ளமாகவும், மேடாகவும் இருக்கலாம். ஆனால் அங்கு வாழும் மக்கள் நல்லொழுக்கமிக்கவர்களாக இருக்க வேண்டும் என மக்களுக்கு நல்லொழுக்கத்தை வலியுறுத்திக் கூறுகிறார். ஒரு நாட்டில் வாழும் மக்களின் பண்பைப் பொறுத்துதான் நாடு அமையும் என்ற உண்மையையும் எடுத்துரைக்கின்றார். இதனை

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்

உயிரினும் ஓம்பப் படும்" (Varadharasan, 2004)

என்று வள்ளுவர் ஒழுக்கம் மிகச்சிறந்த மேன்மையைத் தருவதால் அத்தகைய ஒழுக்கமே உயிரைவிடச் சிறந்ததாகப் போற்றப்படவேண்டும் என எடுத்துரைக்கின்றார்.

நட்புப்போற்றல்

நட்புக்குச் சேர்ந்திருத்தலும் பழகுதலுமாகிய காரணங்கள் வேண்டாம். ஒத்த உணர்ச்சியே நட்பு ஏற்படுதற்குரிய உரிமையைத் தருகிறது. நட்பு, வயது, மொழி, இனம், சாதி, மதம், பால்பகுப்பு, பொருளாதாரம் இவற்றைச் சார்ந்திருப்பதில்லை. நாட்டையாளும் மன்னர்களும், அவர்களை அண்டிவாழும் புலவர்களிடம் நட்பு கொண்டிருந்ததனைச் சங்க இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. மன்னர், புலவர்களுக்கிடையிலான நட்பில் பாரி, கபிலர், அதியமான், ஔவையார், கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையார் ஆகியோரது நட்பு உயர்வான நட்பாகப் பேசப்படுகின்றது. இந்நட்பு சங்ககாலப் பண்பாட்டுச் சிறப்பினை எடுத்துரைப்பனவாகவும் அமைகின்றது. வள்ளுவர்

"அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்

நண்பு என்னும் நாடாச் சிறப்பு" (Varadharasan, 2004)

என்று அன்பு பிறரிடம் விருப்பம் உடையவராக வாழும் தன்மையையும்- எல்லோரிடத்தும் நட்பு என்று சொல்லப்படும் அளவற்ற சிறப்பையும் தரும் என்று கூறுகிறார்.

மன்னன்-புலவர் நட்பிற்கு அதியமான்-ஔவையார் நட்பை இன்றளவும் சான்றாகக் கொள்வர். நட்பிற்கு உயர்ந்த இடம் எக்காலத்தும் மாறுபாடின்றி முடிந்தவரையில் நண்பனைத் தளராமல் தாங்கும் திண்மையாகும்.

"ஒருநாட் செல்லல மிருநாட் செல்லலம்

பலநாள் பயின்று பலரொடு செல்லினும்

தலைநாட் போன்ற விருப்பினன் மாதோ" (Avvai Duraisamy Pillai, 1968)

என்று பாடுகிறார் ஔவையார். ஒருநாளல்ல, இருநாட்கள் அல்லாமல் பலநாள் பலரோடு சென்றாலும் முதல் நாள் பழகியதைப் போலப் பழகும் தன்மையுடையவன் அதியமான் என்று ஔவையார் பாடுவதிலிருந்து அவர்களின் நட்பை உணரமுடிகிறது. அவன் ஔவையிடம் கொண்ட தூய அன்பின் காரணமாகப் பரிசில் தர காலம் தாழ்த்தியதைப் புலப்படுத்துகின்றார். இதனை நட்பு என்பது பொருளாலோ, கைம்மாறு செய்தலாலோ தோன்றுவது கிடையாது. அவை மனதின் விருப்பத்தால் தோன்றுவதாகும் என்பதை,

"தசைபெரி துடையார் நல்கலு நல்குவர்" (Balasubramaniyam, 2004)

என்று குறுந்தொகை எடுத்துரைக்கின்றது.

நம் வாழ்க்கையில் மிக நெருக்கமான நண்பர்களை அறிமுகப்படுத்தும்போது அவர்களைப் பற்றிய சுய விவரங்களைக் கூறி அறிமுகம் செய்வது இயல்பு. ஔவையார் அதியமானைப் பகைவர்களுக்கு அறிமுகப்படுத்துகின்றபோது அவனது மிகுதியான வீரத்தைப் புலப்படுத்தும் உவமையைக் கையாளுகிறார்.

"களம்புக லோம்புமின் றெவ்விர் போரெதிர்ந்

தெம்முளு முளனொரு பொருநன் வைகல்

எண்டேர் செய்யுந் தச்சன்

திங்கள் வலித்த காலன் னோனே" (Avvai Duraisamy Pillai, 1968)

என்று ஔவையார் கூறுகிறார். ஒரு நாளைக்கு எட்டுத் தேர்களைச் செய்கின்ற தச்சன் ஒரு மாதம் முழுவதும் முயன்று பாடுபட்டு உறுதியாகச் செய்த தேர்க்காலைப் போன்ற வலிமையை உடையவன் அதியமான். பகைவர்களே அவனுடன் பகைகொண்டு போர் செய்யப் போர்க்களம் செல்லுதலை கைவிட்டு விடுங்கள் என்கிறார். மேலும் அதியமானுடன் எதிர்நின்று போர்புரிபவர்கள் தோல்வியடைவது திண்ணம் என்கிறார்.

அன்புகொண்ட நண்பர்கள் நம் அருகில் இருக்க வேண்டும் என்ற எண்ணம் எப்பொழுதும் தோன்றும். அவர்கள் அருகில் இல்லையென்றாலும் நண்பர்களின் பேச்சையாவது கேட்க வேண்டுமென்ற உந்துதல் ஏற்படுவது இயல்பான ஒன்று. இத்தகைய எண்ணம் ஏற்படுவதற்குக் காரணம் பாசமும் அன்புணர்வுமாகும். ஔவையாருக்கும் அதியமானுக்கும் நடைபெறுகின்ற பேச்சுத்தன்மையை,

"யாழொடுங் கொள்ளா பொழுதொடும் புணரா

பொருளறி வாரா வாயினுந் தந்தையர்க்

கருள்வந் தனவாற் புதல்வர்தம் மழலை

என்வாய்ச் சொல்லு மன்ன வொன்னார்" (Avvai Duraisamy Pillai, 1968)

என்று எடுத்துரைக்கின்றார். அதியமான் கிடைத்ததற்கு அரிய நெல்லிக்கனியை ஔவையாரிடம் கொடுத்தபோது அவனது இயல்பை வியந்துகூறிப் பாராட்டுகின்றார். பெற்றோர்க்குத் தம் பிள்ளையின் மழலைமொழி இன்பம் தருவதைப் போன்று என்னுடைய வாய்ச்சொல்லும் அதியனிடம் அத்தகைய பற்றையும், பாசத்தையும் தருவன என்று நட்பின் ஆழத்தை எடுத்துரைக்கின்றார். இதனைச்

"செறுநர் விழையாச் செறிந்தநங் கேண்மை"

என்கிறது பரிபாடல். சான்றோரின் நட்பு நீண்டகாலம் நீடித்து நிற்கும் தன்மை உடையதாகும். அந்நட்பு காலத்தால் பழைமை உடையதாக இருப்பதால் ஒருவரது குணத்தை அளந்தறியும் குணம் இயல்பாக வாய்த்துவிடும். அத்தகைய நட்பினைப் பகைவர்கள் கூடப் போற்றுவதை அறியமுடிகிறது.

அதியமான் அரிதின் முயன்று பெற்ற நெல்லிக்கனியை தான் உண்பதைவிட ஔவையார் உண்பாராயின் தமிழுக்குச் சிறந்த தொண்டாற்ற முடியும் என்றெண்ணி அவருக்கு அளித்ததைப்; பாராட்டி நீலமணிமிடற்று ஒருவன் போல மன்னுக பெரும என வாழ்த்துகின்றார்.

"பால்புரை பிறைநுதற் பொலிந்த சென்னி

நீலமணிமிடற் றொருவன் போல

மன்னுக பெரும நீயே தொன்னிலைப்

பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட

சிறியிலை நெல்லித் தீங்கனி குறியா

தாத னின்னகத் தடக்கிச்

சாத னீங்க வெமக்கீத் தனையே" (Avvai Duraisamy Pillai, 1968)

என்று பாடுகின்றார். நெல்லிக்கனியை உண்ட ஔவையார் அதியனின் நட்பின் ஆழத்தை உணர்ந்து அவனின் சிறப்பினைப் போற்றுகிறார். சிவபெருமான் எல்லோரும் சாவதற்கு உரிய நஞ்சைத் தான் உண்டு, நீண்டநாள் வாழ்வதற்குரிய அமுதத்தைத் தேவர்களுக்குக் கொடுத்தது போன்று நீண்டநாள் வாழ்விக்கக் கூடிய நெல்லிக்கனியை எனக்குத் தந்தாய். நீ அந்த ஆலமுண்ட கண்டனைப் போன்று நீண்ட நாள் வாழ்வாயாக என வாழ்த்துகிறார். இப்பாடலின்வழி அதியமானின் தமிழ்ப்பற்றையும் புலவர்மீது கொண்ட நட்பின் ஆழத்தையும் அறிய முடிகின்றது.

போர்த்திறன்

சங்கத் தமிழர்கள் காதலையும் வீரத்தையும் இரண்டு கண்களாகப் போற்றியவர்கள். இயற்கையாகவே மறப்பண்பு கொண்டு விளங்கினார்கள். அவர்களின், பழக்கவழக்கம், தொழில், விளையாட்டு போன்றவற்றிலும் வீரம் செறிந்திருந்தமையை அறிய முடிகின்றது. போர் என்பது இருபெரும் வேந்தர்கள் தம் பெரும் படைகளைத் திரட்டி அறம் தவறாமல் களத்தில் வீரத்தை நிலைநாட்டுவதாகும். பகையரசர்கள் தம்முள் எதிர்நின்று மோதும் நாட்டுச் சண்டைகளைக் குறிக்குமேயல்லாமல் சிறுசண்டைகளைக் குறிக்காது. போர் அரசியலோடு தொடர்புடைய நிகழ்வாகும். 'போரெனிற் புகலும் புனைகழல் மறவர்' என்று தமிழர்கள் போர்வேட்கை மிக்கவர்களாய் இருந்த தன்மையினை அறிய முடிகிறது. அக்காலத்தில் ஆண்கள் மட்டுமின்றிப் பெண்களும் வீரம் மிக்கவர்களாகத் திகழ்ந்ததைக் காணமுடிகின்றது.

சங்ககால அரசியலில் அமைச்சர், தூதுவர், புலவர் ஆகியோர் முக்கியப் பங்கினை வகித்திருந்தனர். தமிழகத்தை மூவேந்தர் மட்டுமின்றிக் குறுநிலமன்னர்கள் பலரும் ஆட்சிப் புரிந்தனர். இவர்களுள் தகடூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த அதியமானின் அவைக்களப்புலவராகவும் நெருங்கியநண்பராகவும் விளங்கியவர் ஔவையார். இவர் மன்னர்களுக்கு வீரஉணர்ச்சியை ஊட்டிப் போர் செய்யத் தூண்டும் வாயிலாக இருந்திருக்கின்றார். ஔவையார் பகைவேந்தர் இருவருக்குமிடையில் ஒற்றுமையை ஏற்படுத்தும் வகையில் தூதுவராகவும், போரை ஊக்குவிக்கும் பொருட்டும், போர்குறித்துப் புகழ்ந்துபாடியும், அப்போரினால் பகைவர்களின் அழிவுக்கு இரங்கியும் பாடல்கள் பாடியிருப்பதைக் காணமுடிகிறது.

போருக்குத் தூது முக்கியமானதாகக் கருதப்படுகிறது. இருமன்னர்களுக்கு இடையே ஏற்படும் பூசல்கள் தூதின் மூலமாகத் தீர்க்கப்படுவதைக் காணமுடிகின்றது. அதியமானிடம் கொண்ட அன்பின் காரணமாகப் போரைத் தவிர்க்கும் பொருட்டுத் தொண்டைமானிடம் தூது சென்றுள்ளார் ஔவையார்.

"இவ்வே பீலி யணிந்து மாலைசூட்டிக்

கண்டிர ணோன்காழ் திருத்திநெய் யணிந்து

கடியுடை வியனக ரவ்வே யவ்வே

பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து” (Avvai Duraisamy Pillai, 1968)

என்ற பாடலின் வழி அதியமானின் வீரத்தைத் தொண்டைமானிடம் வெளிப்படுத்துகிறார். தொண்டைமானின் படைக்கலத்தைப் பார்வையிட்ட ஔவையார் அதியமானின் படைக்கலன்கள் எப்போதும் உலைக்களத்தில் இட்டு கூர்தீட்டப்படுகின்றன. புதிய போர்க்கருவிகள் செய்யும் ஒலி கேட்டவண்ணம் இருக்கின்றது. உம்முடைய படைக்கலன்கள் நெய்பூசப்பெற்றுக் காட்சிப்பொருள்போல அழகாக வைக்கப்பட்டிருக்கின்றன என்று அதியனின் போராற்றலைப் பழிப்பது போலப் புகழ்ந்தும், தொண்டைமானைப் புகழ்வது போலப் பழித்தும் பேசுகின்றார். இதன்மூலம் தமது மதிநுட்பத்தால் மறைமுகமாக அதியனின் வீரத்தை உணர்த்திய ஔவையின் அறமான பேச்சுப் போரைத்தடுக்கக் காரணமாக அமைவதைக் காணமுடிகிறது. இதைப்போன்று அதியமானுக்குக் கப்பம்கட்ட மறுக்கும் அரசர்களிடம் சென்று அறிவுறுத்துகிறார். நாட்டோடும் நன் மனைவியோடு வாழ விருப்பமுள்ளவர்கள் அதியனுக்குத் திறை செலுத்திவிடுங்கள் இல்லையென்றால் அவனுடன் போருக்குச் சென்று அழிவைத் தேடிக்கொள்வது உறுதி என்கிறார்.

“பிணிக்கதிர் நெல்லின் செம்மன் மூதூர்

நுமக்குரித் தாகல் வேண்டிற் சென்றவற்

கிறுக்கல் வேண்டுந் திறையே மருப்பின்

ஒல்வா னல்லன் வெம்போ ரானெனச்

சொல்லவுந் தேறீ ராயின் மெல்லியற்” (Avvai Duraisamy Pillai, 1968)

என்று கூறுவதன் மூலம் ஔவையாரின் போரைத் தவிர்க்கும் நெறியைக் காணமுடிகின்றது. இவரைப்போன்று மதிநுட்பம் வாய்ந்த புலவர் இன்று இருந்திருந்தால் உலகில் நடைபெறுகின்ற பல போர்கள் தவிர்க்கப்பட்டிருக்கும்.

பேரழிவை ஏற்படுத்துகின்ற போரைத் தவிர்த்தாலும் நம்மை அழிக்க வரும் பகையை அழிக்க வேண்டும் என்னும் நெறியை அறிவுறுத்துகிறார்.

“மறப்புலி யுடலின்மான்கன் முளவோ

மருளின விசும்பின் மாதிரத் தீண்டிய

இருளு முண்டோ ஞாயிறு சினவின்

வழுவில் வன்கை மழவர் பெரும

இருநில மண்கொண்டு சிலைக்கும்

பொருநரு முளரோ நீகளம் புகினே” (Avvai Duraisamy Pillai, 1968)

என்று ஔவையார் போரென்று வந்தால் உண்டாகும் தீமைகளை எண்ணித் தயங்கிய அதியமானிடம் புலி சினந்தால் மான்கூட்டம் எதிரே நிற்க முடியாது என்றும், பெரிய தடங்கைகளை உடைய போர்க்களம் புகுந்தால் உன்னை எதிர்ப்பவர் எவரும் இல்லை எனக்கூறி அதியமானைப் போர் செய்யத் தூண்டுவதைக் காணமுடிகிறது.

போர்க்களத்தில் அதியமான் பகைவர்களை அழித்து வெற்றிப்பெற்றதை

“வாள்போழ்ந் தடக்கலு முய்ந்தனர் மாதோ

வரிஞிமி றார்க்கும் வாய்புகு கடாஅத்

தண்ணல் யானை யடுகளத் தொழிய

அருஞ்சமந் ததைய நூறிநீ

பெருந்தகை விழுப்புண் பட்ட மாறே” (Avvai Duraisamy Pillai, 1968)

என்று மகிழ்ச்சியுடன் ஔவையார் பாடுகின்றார். அதியமான் பகைவர்களை எதிர்த்துப் போரிட்ட பொழுது பெரும் விழுப்புண்கள்பட்ட அதியமானின் வீரத்தை எண்ணி மகிழ்ந்து, உன்னுடன் போரிட்ட பகைவரெல்லாம் உன் வாளினால் சிதைந்து போயினர். இனி உன்னை வெல்வதற்குப் போர் எங்கு இருக்கின்றது என்று புகழ்ந்து போற்றுகின்றார்.

போரில் உயிர்கள் அழிவதை விரும்பாத ஔவையார்,

“உறுமுறை மரபிற் புறநின் றுய்க்கும்

கூற்றத் தனையை: யாகலிற் போற்றார்” (Avvai Duraisamy Pillai, 1968)

என்று போரினைத் தடுக்கவும் செய்கின்றார். அதியன் படையெடுத்துச் செல்லும் பகை நாடுகளில் உள்ளவர்கள் அஞ்சி நடுங்குவதையும், அவன் பகைவர்களுக்குக் கூற்றுவன் போலிருப்பதையும், பகைவர்களின் நாடு அழிந்து போவதையும் எடுத்துரைக்கின்றார். இவற்றின்மூலம் அதியனின் போர்த்திறத்தைப் புகழ்ந்து கூறியும், பகைவர்களின் உயிர்கள் அழிவதற்கு மனம் வருந்தியும் பாடுவதைக் காணமுடிகின்றது.

வீரமரணத்தை விரும்புதல்

மண்ணில் பிறக்கின்ற உயிர் இறப்பது என்பது இயற்கையின் நியதியாகும். அத்தகைய இறப்பைக்கூட உடலும் மனமும் ஊக்கமும் குன்றாமல் வாழும் காலத்தில் எவ்வுயிரும் விரும்புவதில்லை. பழந்தமிழ் மறவர்கள் விழுப்புண்ணையும், வீரமரணத்தையும் விரும்பி ஏற்றதோடல்லாமல், அவை வாய்க்காதபோது அதற்காக வருந்துவதையும் காணமுடிகின்றது. போரில் ஏற்படுகின்ற காயமே புகழுக்கு உரியது என்று கருதுகின்றனர். தமிழ் இலக்கிய மரபில் புறநானூற்றுக் கால மக்களிடத்தில் வீரம் முக்கியமான பங்களிப்பைக் கொடுத்திருக்கிறது. குழந்தை இறந்து பிறந்தாலோ அல்லது தசைப்பிண்டமாகப் பிறந்தாலோ அவற்றின் உடம்பில் கத்தியால் கீறி வீரத்தழும்பை உண்டாக்கியபிறகே புதைக்கும் மரபு சங்ககாலத்தில் இருந்திருக்கிறது.

அரசனால் போற்றப்பட்டத் தன்மகன், நன்றிக்கடனுக்காக இன்னுயிரை தருவதற்குரிய காலம் வரவில்லையென மறக்குடியில் பிறந்த பெண் ஏங்குவதை,

“வெள்ளை வெள்யாட்டுச் செச்சை போலத்

தன்னோ ரன்ன விளைய ரிருப்பப்

பலர்மீது நீட்டிய மண்டையென் சிறுவனைக்

கால்கழி கட்டிலிற் கிடப்பித்

தூவெள் ளறுவை போர்ப்பித் திலதே”15(புறம்:286)

என்று ஔவையார் புலப்படுத்துகிறார். இதனை வள்ளுவர்

“விழுப்புண் படாதநாள் எல்லாம் வழுக்கினுள்

வைக்கும்தன் நாளை எடுத்து” (Varadharasan, 2004)

என்று வீரன் நாட்டுக்காக வாழாமல் விழுப்புண்படாமல் இருந்த நாட்களை வீணாகக் கருதி நாணுவான் என்கிறார்.

குழந்தையை நினைக்கும் போதும், பசியால் அழும் போதும் பெற்ற தாயின் மார்பில் பால் சுரப்பது இயல்பு. இதற்கு மாறாகப் போர்க்களத்தில் புறமுதுகிட்டு ஓடாமல், படைகளின் இடையில் வெட்டுண்டு, உடல் சிதைந்து கிடக்கும் உறுதிமிக்க வீரனைக் கண்டு அவனை மகனாகப் பெற்றதாயின் வற்றிய மார்பில் பால்சுரந்து ஊறுகிறது. அத்தாயைப் பொறுத்தவரை இறந்தது உடல் இறவாதது மகனின் புகழ் என்பதை,

“வருபடை போழ்ந்து வாய்ப்பட விலங்கி

இடைப்படை யழுவத்துச் சிதைந்துவே றாகிய

சிறப்புடை யாளன் மாண்புகண் டருளி

வாடுமுலை யூறிச் சுரந்தன

ஓடாப் பூட்கை விடலை தாய்க்கே" (Avvai Duraisamy Pillai, 1968)

என்று வீரத்தாயின் மாண்பினை எடுத்துரைக்கின்றார்.

கையறுநிலை

உலகத்தின் சிறப்பென்பது அதன் நிலையாமைத் தன்மையைக் குறிக்கும். இதனை மன்னா உலகம் என்பர். வீரநிலைத்தலைவனைச் சார்ந்திருக்கும் சமுதாயம் அவனை இழந்தநிலையில் கையற்று வாடுகின்ற நிலையைச் சங்கப்பாடல் காட்டுகின்றன. இத்தகைய பாடல்கள் அவலச்சுவை மிகுந்ததாகக் காணப்படுகின்றன.

"கழிந்தோர் தேஎத்துக் கழிபடர் உறீஇ

ஒழிந்தோர் புலம்பிய கையறுநிலையும்" (Ilampuranar, 1953)

என்கிறது தொல்காப்பியம். செத்தார்மாட்டுச் சாவாதார் வருத்தமுற்றுப் புலம்பிய கையறுநிலையும் என்கிறார் இளம்பூரணர்.

அதியமான் மாண்டபோது அவனது பூத உடலை ஈமத்தீ எரித்தாலும் புகழுடலை எத்தீயாலும் எரிக்க முடியாது. அவனின் வெண்கொற்றக்குடையானது உலகமக்களை நிழல் போலக் காக்கின்ற திங்களைப் போன்றது. ஞாயிறு போல் பேரொளி வீசுகின்ற அவனுடைய புகழையும், பெருமையையும் எவராலும் அழிக்க முடியாது என்பதை,

"எறிபுனக் குறவன் குறைய லன்ன

கரிபுற விறகி னீம வொள்ளழற்

குறுகினுங் குறுகுக குறுகாது சென்று

விசும்புற நீளினு நீள்க பசுங்கதிர்த்

திங்க ளன்ன வெண்குடை

ஒண்ஞாயி றன்னோன் புகழ்மா யலவே" (Avvai Duraisamy Pillai, 1968)

என்று அதியனின் அழியாப் புகழை ஔவையார் பாடுகிறார். தீயானது வானத்தினைத் தொடுமளவிற்கு உயர்ந்தாலும் வெண்மதியினையும், ஞாயிறையும் அத்தீயால் நெருங்க இயலாது. அவற்றைப்போல அதியனின் புகழ், பெருமை, வீரம் இவற்றை எத்தீயாலும் அழிக்க முடியாது என்று கண்ணீருடன் எடுத்துரைக்கின்றார். இதனை நந்திக்கலம்பகம்

"வானுறுமதியை அடைந்துஉன் வதனம்

மறிகடல் புகுந்தது உன் கீர்த்தி

கானுறு புலியை அடைத்தது உன்வீரம்

கற்பகம் அடைந்தது உன் கரங்கள்

தேனுறுமலராள் அரியிடம் புகுந்தாள்

செந்தழல் அடைந்தது உன்தேகம்

நானும் என்கலியும் எவ்விடம் புகுவோம்

நந்தியே நம்தயா பரனே"

என்று நந்திவர்மப் பல்லவன் இறந்ததைப் புலவர் வருந்திப் பாடுகிறார். நந்திவர்மன் இறந்தபிறகு அவனது முகத்தின் ஒளி நிலவிடமும், புகழ் அலைமோதுகின்ற கடலிடமும், வீரம் காட்டில் வாழுகின்ற புலியிடமும் சேர்ந்து விட்டது. அவனுடைய கொடைத்தன்மைமிக்க கைகள் கற்பகமரத்திடமும், திருமகள் திருமாலிடமும், உடல் எரியும் நெருப்பிடமும் சேர்ந்து விட்டதால் இனி நானும் என்னுடைய வறுமையும் எங்கு சென்று வாழ்வோம் என்று புலவர் நந்திவர்மனின் இறப்பினை எண்ணி வருந்திப் பாடுவதைக் காணமுடிகின்றது.

அதியமான் இறந்த பின்னர் அவனின் உடலை அடக்கம் செய்யச் சான்றோர்கள் நல்ல நாளில் நடுகல் நாட்டி அவனுடைய பீடும் பெருமையும் எழுதி மயிற்பீலிச் சூட்டி விழா எடுத்தனர். ஔவையார் நடுகல்லாகிய அதியமானுக்குச் சிறுகலங்களில் நாரால் வடிக்கப்பட்ட தேறலைக் கண்டு கண்ணீருடன் தம் ஆற்றாமையை வெளிப்படுத்துகின்றார்.

“இல்லா கியரோ காலை மாலை

அல்லா கியர்யான் வாழுநாளே

நடுகற் பீலி சூட்டி நாரரி

சிறுகலத் துகுப்பவுங் கொள்வன் கொல்லோ

கோடுயர் பிறங்குமலை கெழீஇய

நாடுடன் கொடுப்பவுங் கொள்ளாதோனே” (Avvai Duraisamy Pillai, 1968)

என்று அதியமானின் நடுகல்லை பார்த்துப் பாடுகின்றார். அதியமான் இறந்துவிட்டான் காலைமாலை என்னும் இரண்டு வேளைகளும் இனிஎனக்கு இல்லாது ஒழியட்டும என் வாழ்நாள் முழுவதும் இருண்டுபோகட்டும் என அவனை இழந்த துன்பத்தினால் அழுதுபுலம்புகின்றார். பகைவர்கள் தமது நாடு முழுவதும் கொடுத்தாலும் கொள்ளாத மறப்பண்பினை உடைய அதியமான் இந்த சிறு கலங்களில் இவர்கள் படைக்கும் தேறலை ஏற்றுக் கொள்வானோ? எனப்பாடி தன்னுடைய ஆற்றாமையைப் புலப்படுத்துவது மூலம் அதியமானின் பண்பை உணரமுடிகிறது. இதனைப் புறப்பொருள்வெண்பாமாலை

“வெருவரும் வாளமர் விளிந்தோற் கண்டு

கருவி மாக்கள் கையற வுரைத்தன்று” (Somasundaranar, 1955)

என்று கூறுகிறது. வாள்போரில் இறந்துபட்ட வீரனைக்கண்டு எம்முடைய கண்கள் சோர்ந்து போக வில்லையென்றால் அவை கண்கள் அல்ல உணர்ச்சியில்லாத கற்கள் என்று பாணர்கள் தங்கள் உள்ள குமுறல்களைக் கூறுகின்றனர்.

பண்டைத்தமிழ் மன்னர்களும், வள்ளல்களும் வெறும் நாட்டைக் காக்கின்ற காவலர்களாக மட்டுமில்லாமல் வறுமையில் வாடுகின்ற பாவலர்களின் பாதுகாவலர்களாகவும் இருந்திருக்கின்றனர். அதியமான் இறந்த பிரிவை ஆற்றாது, ஔவையார் அவனது பெரும்புகழையும், மாண்பையும்,

“சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே

பெரியகட் பெறினே

யாம்பாடத் தான்மகிழ்ந் துண்ணு மன்னே

சிறுசோற் றானு நனிபல கலத்தன் மன்னே

பெருஞ்சோற் றாறு நனிபல கலத்தன் மன்னே” (Avvai Duraisamy Pillai, 1968)

என்று பாடி வருந்துகின்றார். குறைவாகப் பெற்றாலும் நிறைவாகப் பெற்றாலும் பலரோடு பகிர்ந்துண்ணும் மாண்புமிக்கவன். அம்புடன் வேல் தைத்து உருவும் போர்க்களங்களில் வீரமுடன் நின்று திறம்படப் போர்புரியும் ஆற்றல் உடையவன். நறுமணம் கமழுகின்ற தன்கையால் புலால் நாற்றமுடைய எங்களின் தலையைத் தடவுகின்ற அருளுடையவன். அத்தகைய பண்பினை

உடையவனை இப்போது இழந்து விட்டோம் என்று தாங்கமுடியாத துன்பத்தினை எண்ணி வருந்துகின்றார்.

“அருந்தலை யிரும்பாண ரகன்மண்டைத் துளையுரீ இ

இரப்போர் கையுளும் போகிப்

புரப்போர் புன்கண் பாவை சோர

அஞ்சொனுண் டேர்ச்சிப் புலவர்நாவிற்

இனிப்இ பாடுநரு மில்லைப் பாடுநர்க்கொன் றீகுநருமில்லை” (Avvai Duraisamy Pillai, 1968)

என்று பகைமன்னன் வீசி எறிந்த வேல் அதியனின் மார்பினை மட்டும் ஊடுருவிச் செல்லாமல் பெரும்பாணர்களின் அகன்ற உண்கலத்தின் துளையை ஊடுருவி இரப்பவர் கைகளையும் துளைத்துப் புலவர் நாவில் சென்று வீழ்ந்தது. இனிமேல்பாடுபவருமில்லை, பாடுபவர்க்குக் கொடுப்பவருமில்லை. அத்தகைய பலருக்கும் பயனுடையவனான அதியமான் இறந்துபட்டான் என்று தன்துன்ப உணர்ச்சியைக் காட்டுகிறார். இப்பாடல்வழி நாட்டையாளும் மன்னர்கள் வறுமையில் வாடும் புலவர்களிடம் பாகுபாடு பாராட்டாமல் நட்பு கொண்டு ஆதரித்து அவர்களின் வறுமையைப் போக்கியுள்ளார்கள்.

முடிவுரை

புறநானூற்றில் ஔவையாரின் பாடல்கள்வழி அக்காலச் சமுதாயத்தில் பெண்கள்; சிறந்த இடத்தைப் பெற்றுள்ளதனை அறியமுடிகிறது. ஆணுக்கு இணையாகப் பெண்களும் கல்வி கற்றுப் பாடல்கள் புனைந்துள்ளனர். அவரது கல்வியறிவு, துணிவு, பொருளாதாரச்சார்பின்மை ஆகிய அவர் மீதான சமூக மதிப்பை உயர்த்தியது எனலாம். இருமன்னர்களுக்கிடையே நடைபெறயிருந்த போரைத் தடுத்து காலத்தையும் இடத்தையும் ஆராய்ந்து தனது சொல்வன்மையாலும் செயலாலும் தடுத்து நிறுத்தி வெற்றிக்கண்ட ஔவையின் நாநலத்தினை அறியமுடிகிறது. அதியமானின் இறுதிக்காலம் வரை அவனுடன் ஔவையார் தங்கியிருந்தார் என்பது புறநானூற்றில் இவர் பாடிய பாடலால் அறியப்படுகிறது. இவருடைய கையறுநிலைப்பாடல் கருங்கல் நெஞ்சையும் உருக்கும் தன்மை உடையது. படைப்புக் கடவுள் பிரம்மனைவிட நூல்களைப் படைக்கும் புலவர்கள் உயர்ந்தவர். புலவர்களின் உயர்வைப்போற்றுவதும், கற்றவர்களுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பது கல்விகற்ற பெண்களின் செயல்திறனால் வெளிப்படுகின்றது. ஔவையாரின் புறப்பாடல்களை உற்றுநோக்கும் பொழுது புறநானூற்றில் ஔவையார் பாடிய 33 பாடல்களில் இருபத்திரண்டு பாக்களில் அதியமானைப் பற்றியே பாடியுள்ளார். இப்பாடல்கள் வழி அவர் அதியன் மேல் கொண்டிருக்கும் நட்பின் ஆழத்தையும் அன்பையும் காண இயலுகிறது. அவைக் களப் புலவராகவும், அரசியல் இராஜ தந்திரியாகவும் விளங்கிய ஔவையார் நீதி நெறியோடு செயல்பட்டு, இடத்திற்கும், காலத்திற்கும் ஏற்றாற்போல் போர்த்திறன் நெறியைக் கையாண்டு, மனிதகுலத்தின் அமைதியான வாழ்விற்காகப் பாடுபட்டதையும் அறியமுடிகின்றது. அதியமானின் இறப்பிற்காக வருந்திய சான்றோர் கூட்டத்தில் அவனுடைய கொடைநலமும், புலவரைப் போற்றும் பண்பினையும் கூறினாலும் ஔவை அவனுடைய வள்ளன்மையை அறிந்தவராதலின் அவன்மீது பாடப்பட்ட இரங்கல் பாக்கள் கற்போரைக் கண்ணீர் சிந்த வைக்கும் ஆற்றல் வாய்ந்தவையாக அமைந்துள்ளது. புறநானூற்றில் ஔவையாரின் இலக்கிய செல்நெறிகள் பெண்ணுலகு வியக்குமளவிற்கு உயர்ந்த இடத்தைப் பெற்றுள்ளது என்பதை இக்கட்டுரை நிறுவுகிறது.

References

Avvai Duraisamy Pillai, S. (1968) Purananuru, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Chennai, India.

Balasubramaniyam, K.V. (2004) Kurunthogai, New Century Book House Pvt Ltd, Chennai, India.

Ilampuranar, (1953) Tolkappiyam Porulathikaram, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Chennai, India.

Somasundaranar, P.V. (1955) Puraporul Venbamalai, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Chennai, India.

Varadharasan, M. (2004) Thirukkural Thelivurai, The South India Saiva Siddhantha Works Publishing Society, Tinnevelly, India.

Funding: No funding was received for conducting this study.

Conflict of Interest: The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License